Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 224/2018**

**வழக்கு சாட்சி எண். PW5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேடியப்பன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | சின்னதம்பி | தொழில் | : | |
| கிராமம் | : | கீரைப்பட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | : | அரூர் | வயது | : | 59 |

(5ம் எதிரி ஆஜர். 1 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. 1 முதல் 4 எதிரிகள் ஆஜர் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **4th** Day of **April 2024.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சமூக காடுகள் மற்றும் வன விரிவாக்க விளம்பர சரகம் அரூரில் வனவராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 2015ம் ஆண்டு மொரப்பூர் வனச்சரகம் வாதாப்பட்டி பிரிவில் வனவராக பணிபுரிந்து வந்தபோது 07.04.2015ம் தேதி அதிகாலை 3 மணியளவில் மொரப்பூர் வனச்சரக அலுவலர், கோட்டப்பட்டி வனச்சரக அலுவலர் அவர்களின் இரகசிய தகவலின் அடிப்படையில் நான் மற்றும் பையர்நாயக்கன்பட்டி வனவர் பெரியண்ணன், பூதநத்தம் பிரிவு வனவர் வெங்கடேசன், மொரப்பூர் சரக தனி பணி வனவர் நடராஜன், மற்றும் வனக்காப்பாளர்கள் வெங்கடேசன், ஜெயராமன், ராஜா ஆகியோருடன் தனிக்குழுவாக அரூர்

காப்புக்காட்டு அரூர் – மொரப்பூர் சாலையில் வாகன தணிக்கை செய்துகொண்டிருந்தபோது TN 29 M 6663 TATA Indica வாகனம் சாலையில் வேகமாக வரும்போது அதனை தடுத்து நிறுத்தி சோதனை செய்தபோது டிக்கியில் சுமார் 106 கிலோ எடையுள்ள செம்மரக்கட்டைகள் இருந்தது. மேற்படி காரில் 5 நபர்கள் இருந்தார்கள். அவர்களை விசாரித்தபோது அரூர் காப்புக்காட்டில் செம்மரக்கட்டைகளை வெட்டிக்கொண்டுவந்ததாக தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள். எதிரி தீர்த்தகிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் அசாஆ 3 ஒப்புதல் வாக்குமூலம் நான் பதிவு செய்ததுதான். கார் டிக்கியில் இருந்த 106 கிலோ செம்மரக்கட்டைகளை மகசரில் கைப்பற்றப்பட்டது. அசாஆ 6 கைப்பற்றுதல் மகசரில் என்னுடைய கையொப்பம் உள்ளது. கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்து மற்றும் எதிரிகளை மொரப்பூர் வனச்சரகத்திற்கு அழைத்துவந்து எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்ய நான் உதவியாக இருந்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இரகசிய தகவலின் பேரில் ரோந்து பணிக்கு சென்றோம். மொரப்பூர் வனசரக அலுவலகத்தில் இருந்து காரில் அதிகாலை 2.45 மணிக்கு சென்றோம். நேராக அரூர்–மொரப்பூர் சாலையில் ரோந்து பணிக்கு சென்றோம். நாங்கள் ரோந்து பணிக்கு சென்ற நேரம் இருட்டான நேரம் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் வெளிச்சம் இல்லை என்றால் சரிதான். இருட்டான நேரத்தில் ஒருவரை ஒருவர் பார்க்க இயலாது என்றால் சரியல்ல. நாங்கள் டார்ச் லைட் வைத்திருந்தோம். ஒப்புதல் வாக்குமூலம் சம்பவயிடத்தில் டார்ச் லைட் வெளிச்சத்தில் பதிவு செய்தோம். சம்பவயிடத்தில் நாங்கள் 9 நபர்கள் மட்டும்தான் இருந்தோம் என்றால் எனக்கு சரியாக நியாபகம் இல்லை. நான் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு

செய்தபோது வனக்காப்பாளர் வெங்கடேசன் டார்ச் லைட் பிடித்தார். மற்ற 4 எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் அளித்த விபரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற எதிரி தீர்த்தகிரி எந்த இடத்தில் செம்மரக்கட்டைகளை வெட்டினார் என்று குறிப்பிட்டு சொன்னாரா என்றால் அரூர் காப்புக்காட்டில் வெட்டியதாக சொன்னார். இது சம்மந்தமாக மற்ற எதிரிகள் என்ன சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. செம்மரக்கட்டைகளை எந்த இடத்தில் வெட்டப்பட்டது என்று எதிரி அடையாளம் காட்டினாரா என்றால் அடையாளம் காண்பித்தார். மற்ற எதிரிகளிடம் அவ்வாறு கேட்டகப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 20 நிமிடத்தில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். மற்ற அதிகாரிகள் எவ்வளவு நேரத்தில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. அரூர்–மொரப்பூர் சாலை மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள சாலை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் அங்கு போக்குவரத்து அதிகமாக இல்லை. தனிநபர் சாட்சிகளை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சம்பவம் நடந்த நேரம் அதிகாலை என்பதால் தனி நபர் சாட்சிகள் யாரும் இல்லை. அதிகாலை 3.30 மணியளவில் எதிரிகளை மொரப்பூர் வனச்சரகம் அழைத்து சென்றோம். அந்த நேரத்தில் மாவட்ட வன அலுவலர் அலுவலகத்தில் இருந்தார். வேறு யாரும் அதிகாரிகள் உடன் இருந்தார்களா என்றால் இல்லை. நான் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரிகளிடம் இருந்து செம்மரக்கட்டைகளை எதுவும் பறிமுதல் செய்யவில்லை என்றும்,

எதிரிகளுக்கு எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்து பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**